பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

14 08 2024 7 15
செவ்வாய்க்கிழமை காலை

தலைப்புச் செய்திகள் -

1. நாட்டின் 78-வது சுதந்திர தினத்தையொட்டி குயடிரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று இரவு ஏழு மணிக்கு நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார்.
2. நாடு சுதந்திரம் அடைந்தபோது ஏற்பட்ட பிரிவினை துயரங்கள் தினம் இன்று நாடு முழுவதும் அனுசரிக்கப்படுகிறது.
3. கிராமங்களில் நவீன வசதிகள் கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.
4. இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதலைத் தவிர்க்குமாறு இங்கிலாந்து உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் விடுத்த வேண்டுகோளை ஈரான் நிராகரித்துள்ளது.
5. பாரிஸ் ஒலிம்பிக் மல்யுத்த போட்டியில் இந்தியாவின் வினேஷ் போகத்தின் தகுதி நீக்கத்துக்கு எதிரான மேல் முறையீட்டு மனு மீதான தீர்ப்பு நாளை மறுநாள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**[]<<<>>>[]**

நாட்டின் 78-வது சுதந்திர தினத்தையொட்டி குயடிரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று இரவு ஏழு மணிக்கு நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார்.

ஆகாஷவாணி மற்றும் தூர்தர்ஷனின் அனைத்து அலைவரிசைகளிலும் அவரது உரை இடம்பெறுகிறது.

குடியரசுத் தலைவர் உரையின் தமிழாக்கம் இரவு மணி 9-30-க்கு ஒலிபரப்பாகிறது.

இதனை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

குடியரசுத் தலைவரின் உரையை அடுத்து வழக்கமாக இரவு மணி

7-15-க்கு ஒலிபரப்பாகும் ஆகாஷவாணி செய்தி அறிக்கை இரவு எட்டு மணிக்கு ஒலிபரப்பாகும்.

[]<<<>>>[]

இல்லம் தோறும் தேசியக் கொடி இயக்கம் தொடர்பான நிகழ்ச்சிகள் நாடடின் பல்வேறு பகுதிகளில் உற்சாகமாக நடைபெற்று வருகின்றன.

ஜம்மு காஷ்மீரின் கத்துவா பகுதியில் இல்லம் தோறும் தேசியக் கொடி இயக்கத்தின் பேரணி மத்திய இணை அமைச்சர் திரு ஜிதேந்திர சிங் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்த பேரணி தேசப்பக்தியின் அடையாளமாக திகழ்கிறது என்று கூறினார்.

தேசத்தின் ஒற்றுமைக்காக பாடுபட்ட ஷியாமா பிரசாத் முகர்ஜி-யின் கனவை நனவாக்கும் வகையில் 370-வது பிரிவை பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு ரத்து செய்து ஒரே நாடு ஒரே அரசியலமைப்பு என்பதை நிலை நிறுத்தியுள்ளதாக திரு ஜிதேந்திரசிங் தொவித்தார்.

ஜம்மு-கஷ்மீரின் ரியாஷி பகுதியில் உள்ள மிக உயரமான ரயில் பாலத்தில் 250 மீட்டர் நீள தேசிய கொடி பேரணி ஒன்றும் நடைபெற்றது.

இதில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

உத்தராகண்ட் மாநிலம் ரூர்க்கியில் நடைபெற்ற இருசக்கர வாகனப் பேரணியில் அம்மாநில முதலமைச்சர் திரு புஷ்கர் சிங் தாமி நேற்று பங்கேற்றார்.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் நடைபெற்ற பேரணியில் அம்மாநில முதலமைச்சர் திரு பஜன் லால் சர்மா கலந்து கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இல்லம் தோறும் தேசியக் கொடி தொடர்பான இயக்கம் இளைஞர்களிடையே தேசபக்தியை வலுப்படுத்தும் என்றார்.

ஹரியானா மாநிலம் கர்னாலில் நடைபெற்ற தேசியக் கொடி பேரணியி பங்கேற்ற அம்மாநில முதலமைச்சர் திரு நயப் சிங் சைனி மக்கள் தங்கள் வீடுகளில் தேசியக் கொடியை ஏற்ற வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

சுதந்திர தின கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, தாயின் பெயரில் மரக் கன்றுகளை நட வேண்டுமென்றும் அவர் அறிவுறுத்தினார்.

[]<<<>>>[]

தில்லி செங்கோட்டையில் சுதந்திர தினக் கொண்டாட்டங்களுக்கான ஏற்பாடுகள் குறித்து பாதுகாப்புத் துறை இணை அமைச்சர் திரு சஞ்சய் சேத் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

இதனையடுத்து சுதந்திரதின நிகழ்ச்சியில் பங்கேற்கும் தேசிய மாணவர் படையினர் மற்றும் நாட்டு நலப்பணித் திட்ட தன்னார்வலர்களிடையே அவர் உரையாற்றினார்.

தூய்மை கங்கை இயக்கம், தூய்மை இந்தியா இயக்கம் போன்ற பல தேசிய இயக்கங்களில் இந்த அமைப்பினர் அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதாக அவர் பாராட்டு தெரிவித்தார்.

[]<<<>>>[]

நாடு சுதந்திரம் அடைந்தபோது ஏற்பட்ட பிரிவினை துயரங்கள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

1947-ஆம் ஆண்டு இதே நாளில் இந்தியாவிலிருந்து, பாகிஸ்தான் பிரிக்கப்பட்டபோது ஏற்பட்ட வன்முறையில் ஏராளமானோர் உயிரிழந்னர்.

பிரிவினையின்போது ஏற்பட்ட துயரங்களை நினைவு கூர்ந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 14-ஆம் தேதி பிரிவினை துயங்கள் நினைவு தினமாக அனுசரிக்கப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

இந்நாளையொட்டி நாட்டின் பல்வேறு பகுதிகளில் பிரிவினையால் ஏற்பட்ட துன்பங்களை நினைவுகூரும் நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சென்னையில் ஆளுநர் மாளிகையில் தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சகத்தின் சார்பில் நடைபெறும் பிரிவினை துயரங்கள் தொடர்பான புகைப்பட கண்காட்சியை தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி தொடங்கி வைக்கிறார்.

[]<<<>>>[]

தொலைதூரத்தில் உள்ள இலக்கை மிக துல்லியமாக தாக்கவல்ல் விமான சோதனையான கௌரவ் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது.

1000 கிலோ வெடிகுண்டுடன் தாக்கும் திறன் படைத்த இந்த சோதனையை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பான டி ஆர் டி ஓ, ஒடிசா கடற்கரைப் பகுதியில் நடத்தியதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது ஐதராபாத்தில் உள்ள ஆராய்ச்சி மையம் இதனை உருவாக்கியுள்ளது.

இந்த சோதனையை வெற்றிகரமாக நடத்திய டிஆர்டிஓ மற்றும் விமானப்படைக்கு பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் பாராட்டு தெரிவித்துள்ளார்.

ஆயுதப்படைகளின் திறனை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்படும் உள்நாட்டு பாதுகாப்பு தொழில்நுட்பங்களை மேம்படுத்தும் நடவடிக்கையில் இது ஒரு முக்கிய மைல்கல் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

கிராமங்களில் நவீன வசதிகளை கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

தெலங்கானாவில் உள்ள தேசிய ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் 66-வது பொதுக்குழுக் கூட்டத்தில் பேசிய அவர், கிராமப்புறங்கள் வளர்ச்சியடைய உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

இதனை கருத்தில் கொண்டே பிரதமரின் கிராம சாலைகள் திட்டம், ஜல்ஜீவன் இயக்கம் போன்றவற்றை அரசு செயல்படுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் பத்து கோடி ஊரக மகளிரின் வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளதாக திரு சிவராஜ்சிங் சௌகான் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

அடுத்த ஆண்டு ஹஜ் புனித பயணத்துக்கு இந்தியாவிலிருந்து ஒரு லட்சத்து 75 ஆயிரம் பேருக்கு சௌதி அரேபிய அரசு அனுமதி வழங்கி உள்ளதாக மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ கூறியுள்ளார்.

ஹஜ் புனித பயணத்துக்கான விண்ணப்பப் பதிவு நடைமுறைகளை அவர் நேற்று புதுதில்லியில் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர், முதல் முறையாக ஹஜ் சுவிதா செயலியின் மூலமாகவும் விண்ணப்பங்களை பதிவு செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறினார்.

ஹஜ் யாத்திரிகர்களுக்கு சிறந்த தங்குமிடம் மற்றும் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தித்தர மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

கொல்கத்தாவில் பயிற்சி மருத்துவர் கொலை சம்பவத்தை கண்டித்து மருத்துவர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு நடத்திய வேலைநிறுத்தப் போராட்டம் திரும்பப் பெறப்படுவதாக அறிவித்துள்ளது.

இந்தக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் புதுடெல்லியில் மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு ஜே பி நட்டாவை சந்தித்த பின்னர் இதற்கான அறிவிப்பை அவர்கள் வெளியிட்டனர்.

அமைச்சருடனான சந்திப்புக்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய மருத்துவர்கள் சங்க கூட்டமைப்பின் தலைவர் திரு அவிரல் மாத்தூர், தங்களின் கோரிக்கைகள் ஏற்கப்பட்டுள்ளதால், வேலை நிறுத்தத்தை திரும்பப்பெற முடிவு செய்துள்ளதாக கூறினார்.

**[]<<<>>>[]**

சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் துறையில் ஒத்துழைப்பை அதிகரிப்பது தொடர்பாக அத்துறைக்கான மத்திய அமைச்சககத்துக்கும், அமெரிக்க அரசின் சிறு வர்த்தக அமைப்புக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

மத்திய சிறு, குறு, தொழில்கள் அமைச்சகத்தின் செயலாளர் திரு எஸ் சி எல் தாஸ் மற்றும் அமெரிக்க சிறு வர்த்தக அமைப்பின் நிர்வாகி இசபெல் கேசில்லாஸ் இடையே புதுதில்லியில் இதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது.

உலகளாவிய சந்தையில் இந்த நிறுவனங்களின் பங்களிப்பை மேம்படுத்துவது தொடர்பாக இரு தரப்புக்கும் இடையே ஒத்துழைப்பை அதிகரிக்க இந்த ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.,

பெண் தொழில்முனைவோருக்கு அதிகாரம் அளிப்பதற்கான திட்டங்களை கூட்டாக செயல்படுத்தவும் இது வழிவகுக்கும் என சிறு, குறு, நடுத்தர தொழில்கள் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மக்களுக்கு சிறந்த நிர்வாகத்தை வழங்குவதே ஆந்திர அரசின் நோக்கம் என அந்த மாநில முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு கூறியுள்ளார்.

தேசிய திறன் மேம்பாட்டு ஆணையத்தின் தலைவர் திரு அடில் ஜைனுல்பாய் தலைமையிலான குழுவினருடன் அமராவதியில் நேற்று அவர் ஆலோசனை மேற்கொண்டார்.

இந்த சந்திப்பின் போது, அமராவதியில் நல்லாட்சிக்கான உலகளாவிய நிறுவனத்தை நிறுவ உதவுமாறு ஆணையத்திடம் அவர் கேட்டுக்கொண்டார்.

செயற்கை நுண்ணறிவு போன்ற மேம்பட்ட தொழில்நுட்பங்களில் அரசு ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்கவும், அதன் மூலம் மக்களுக்கு சிறப்பான சேவை வழங்கவும் ஆந்திர அரசு உறுதி பூண்டுள்ளதாக திரு சந்திரபாபு நாயுடு தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

ஜம்மு-காஷ்மீரின் பாதுகாப்பு நிலைமை குறித்து தேர்தல் ஆணையத்தின் குழு மத்திய உள்துறை செயலாளர் திரு அஜய் பல்லாவுடன் இன்று ஆலோசனை நடத்தவுள்ளது.

தலைமைத் தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார் தலைமையிலான குழு அண்மையில் ஜம்மு-கஷ்மீர் யூனியன் பிரதேசத்துக்கு பயணம் மேற்கொண்டு தேர்தல் ஏற்பாடுகள் குறித்து ஆய்வு செய்த நிலையில் இன்று இந்த ஆலோசனை நடைபெறவுள்ளது.

இதனிடையே ஹரியானாவில் சட்டப்பேரவைத் தேர்தல் தொடர்பான முன்னேற்பாடு பணிகள் குறித்து தலைமை தேர்தல் ஆணையர் தலைமையிலான குழு கடந்த இரண்டு நாட்களாக ஆய்வு செய்தது.

சண்டிகரில் நடைபெற்ற இந்த ஆய்வுக் கூட்டத்தில் அதிகாரிகளும், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

நவம்பர் மூன்றாம் தேதியுடன் ஹரியானா சட்டப்பேரவையின் பதவிக்காலம் நிறைவடைய உள்ள நிலையில், தேர்தலை நியாயமாகவும், அமைதியாகவும் நடத்துவது குறித்து இக்கூட்டத்தில் ஆலோசனை நடத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதலைத் தவிர்க்குமாறு இங்கிலாந்து உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் விடுத்த வேண்டுகோளை ஈரான் நிராகரித்துள்ளது.

மேற்கு ஆசியாவில் பதற்றம் நிலவி வரும் சூழலில் இங்கிலாந்து பிரதமர் திரு கெய்ர் ஸ்டார்மர், ஈரான் அதிபர் திரு மசூத் பெஜெஷ்கியானுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேச்சு நடத்தினார்.

அப்போது பேசிய அவர், ராணுவத் தாக்குதல் அச்சுறுத்தல்களை தவிர்க்குமாறு கேட்டுக் கொண்டார்.

ஜெர்மனி உள்ளிட்ட நாடுகளும் தாக்குதலை தவிர்க்குமாறு ஈரானைக் கேட்டுக் கொண்டுள்ளன.

**[]<<<>>>[]**

பாரிஸ் ஒலிம்பிக் மல்யுத்த போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் வினேஷ் போகத் தகுதி நீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மேல் முறையீடு மீதான தீர்ப்பு நாளை மறுநாள் வழங்கப்படும் என்று சர்வதேச விளையாட்டு நடுவர்மன்றம் தெரிவித்துள்ளது.

நேற்று தீர்ப்பு வழங்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் மூன்றாவது முறையாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

***End of News***